(2) கபரகொயன், வண்ணத்துப்பூச்சி
(3) ஈசல், பருந்து

40. பருத்திப் புடைவைத் துண்டைக் கொண்டு கைக்குட்டையைத் தயார் செய்யும் போது புடைவைத் துண்டைச் சுற்றிவர மடித்துத் தைக்க வேண்டிய தையல் எது?

(1) நரம்புத் தையல் (2) கம்பளித் தையல் (3) சங்கிலித் தையல்

41. வீதி சமிக்ஞை விளக்குகளின் தூணில் பச்சை நிற மின்குமிழ் எரியும் போது அதனால் கருதப்படுவது

(1) வாகனத்தை நிறுத்துக என்பது
(2) வாகனத்தைச் செலுத்தத் தயாராகுக என்பது
(3) வாகனத்தைச் செலுத்துக என்பது

42. இரண்டு மாவட்டங்களை மட்டும் கொண்டுள்ள மாகாணம் **அல்லாதது**


(1) வடமேல் மாகாணம் (2) வடமத்திய மாகாணம் (3) தென்மாகாணம்

43. இலங்கைக்கு வடக்கே காணப்படும் நாடு

(1) மலேசியா (2) இந்தியா (3) சோமாலியா

44. ஆறு கால்களைக் கொண்ட பிராணி

(1) சிலந்தி (2) மட்டைத்தேள் (3) கரப்பான்

45. 


நீர் நிரப்பப்பட்டுள்ள இப்பாத்திரத்தில் A, B, C என மூன்று துளைகள் உள்ளன. நீர் மூலம் ஏற்படுத்தப்படும் அமுக்கம் காரணமாக பாத்திரத்திலிருந்து கூடிய தூரத்திற்கு நீர் வெளியே விசிறப்படுவது

(1) துளை A இல் இருந்து
(2) துளை B இல் இருந்து
(3) துளை C இல் இருந்து


[பக். 7 ஐப் பார்க்க

www.ikedu.lk


46. மின்குமிழ் ஒளிராதிருக்கும் சந்தர்ப்பம் பின்வருவனவற்றில் எது?



(1)



(2)




(3)

47. 'பாதுகாப்பற்ற புகையிரதக் கடவை முன்னால்' என்பதைக் குறிக்கும் வீதிக் குறியீடு எது?



(1)



(2)



(3)

48. பனிக்கட்டிகளை உருகாமல் நீண்ட காலம் பேணுவதற்கு செய்யக் கூடிய முறை **அல்லாதது**

(1) பனிக்கட்டிகளுக்கு மேலே மரத்தூளைப் பரவி மூடி வைத்தல்
(2) பனிக்கட்டிகளை ரெஜிபோம் பெட்டியில் இட்டு மூடி வைத்தல்
(3) பனிக்கட்டிகளை நீர் நிரம்பிய பாத்திரத்தில் இட்டு வைத்தல்

49. மருத்துவரினால் நோயாளிக்கு விதிக்கப்படும் மருந்தைக் குடிக்க முன்பாக, கருத்திற் கொள்ள வேண்டிய முக்கிய விடயம்

(1) மருந்தில் அடங்குபவை
(2) மருந்தின் விலை
(3) ஒரு வேளைக்கு எடுக்க வேண்டிய அளவு

50. உணவை உண்ணும் போது பின்பற்ற வேண்டிய நற்பழக்கங்களில் ஒன்று எது?

(1) உண்ணும் போது சப்புக் கொட்டுதல்
(2) அங்குமிங்கும் பார்த்தபடி உண்ணுதல்
(3) கையினால் உணவு உண்பதெனின், உணவை விரல்களினால் மட்டும் பிசைதல்

51. எம்பக்கத் தேவாலயம் எது தொடர்பாகப் பிரசித்தி பெற்றுள்ளது?

(1) பொம்மலாட்டக் கலை
(2) மரச் செதுக்கல் வேலைப்பாடுகள்
(3) கற்செதுக்கல் வேலைப்பாடுகள்

52. தினமும் போதுமான அளவு நீர் பருகும் ஒருவருக்கு

(1) அவரின் சிறுநீரின் நிறம் கடும் நிறமாகமாறும்
(2) உடலில் தளர்ச்சி ஏற்படும்
(3) உடற்கொழுப்பு குறைவடையும்

53. மள்புளுட்டா எனப்படுவது இலங்கைக்கே உரித்தான ஒரு

(1) மூலையூட்டி (2) நகருயிர் (3) மீனினம்

54. பயிர்ச் செய்கைக்குச் சேதம் விளைவிக்கும் பிராணிகள்

(1) ஆந்தை, குளவி
(2) மண்புழு, ஆந்தை
(3) தண்டுகோதி, தத்துவெட்டி

www.lkedu.lk

55. சமையல் பாத்திரங்களைப் பாவித்தபின் நன்றாகக் கழுவினால் மாத்திரம் போதாது அவற்றை உலரவிடவும் வேண்டும் என்பதற்கான மிக முக்கிய காரணம்

(1) ஈரலிப்புள்ள பாத்திரங்களைக் கையாளும் போது அவை கைதவறி விழக்கூடும் என்பது
(2) ஈரலிப்பு நீங்க துடைக்கும் போது பாத்திரங்கள் அழகு பெறும் என்பது
(3) கிருமிகள் (பங்கசுக்கள்) ஈரலிப்பில் எளிதாக வளர்ந்து நோய்களை உருவாக்கும் என்பது

56. தாழ் நிலங்களை நிரப்புதல், மணல் அகழ்தல் ஆகிய மனிதச் செயற்பாடுகளால் நிகழத்தக்க அனர்த்தம்

(1) வெள்ளம் (2) சூறாவளி (3) சுனாமி

57. சுகாதார ரீதியாகப் பாதுகாப்பற்ற ஒரு செயற்பாடு எது?

(1) பாதணிகளைக் கழற்றிய பின் வீட்டினுள் நுழைதல்
(2) உணவு உண்பதற்கு முன் கைகளை நன்றாகக் கழுவிக் கொள்ளல்
(3) படுக்கைக்காகப் பயன்படுத்தும் போர்வையை வீட்டில் எல்லோரும் பொதுவாகப் பயன்படுத்தல்

58. உணவுப் பொருள்களை மூடிவைப்பதால்

(1) சூழலில் நுளம்புகள் பெருக்கமடைவதைத் தவிர்க்கலாம்
(2) இலையான்கள், கரப்பான்கள், எலிகள் என்பவற்றால் உணவு அசுத்தமடைவதைத் தவிர்க்கலாம்
(3) நுளம்புகளால் பரவும் நோயைத் தவிர்க்கலாம்

59. சமைப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட கீரையையும் மரக்கறியையும் வெட்டுவதற்கு முன் கழுவ வேண்டியது

(1) உப்பு நீரில் (2) குளிர் நீரில் (3) வெந்நீரில்

60. நீங்கள் பாடசாலை கலைந்து வீடுவரும் வழியில் வீதியோரத்தில் சிறகொடிந்த நிலையில் ஒரு கிளி விழுந்து கிடப்பதைக் காண்கிறீர்கள். அதன் மீது இரக்கப்பட்ட நீங்கள் அதனை எடுத்துக் கொண்டு வீடு நோக்கிச் செல்கிறீர்கள். இதன் பின்னர் நீங்கள் செய்யப் போவது யாது என்பதைத் தலைப்பாகக் கொண்டு மூன்று வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியமும் **ஐந்து** சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பு, எழுத்துக் கூட்டல் என்பவையும் சரியாக இருத்தல் வேண்டும்)

1. .....
.....
.....

2. .....
.....
.....

3. .....
.....
.....

***

www.ikedu.lk

සියලුම හිමිකම් ඇවිරිණි]
(මුලුප්පතිප්පුරිමையுடையது)
All rights Reserved]

ஆசிரியர்: எம்.ஏ. அபுதாஹிர்

Q First கல்வி நிறுவகம்

முன்னோடி வினாத்தாள் - 3

5

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான முனனோடி வினாத்தாள் 2025

வினாத்தாள் I

ஒரு மணித்தியாலம்

சுட்டெண்: .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
* இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை **இவ்வினாத்தாளிலேயே எழுதுக.**
* ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்


பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம் இலக்கத்தில்	
மொத்தம் எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப் பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளிகள் சரியாகும்	V/I/T/CH

[பக். 2 ஐப் பார்க்க


www.ikeu.lk

1. தரப்பட்ட ஐந்து உருக்களில் ஒன்று ஏனைய நான்கு உருக்களில் இருந்தும் வேறுபடுகிறது. வேறுபடும் உருவைத் தெரிவு செய்க.



(1) A (2) C (3) E


2. ஒத்த இரண்டு உருக்கள் **இடம்பெறாத** அடைப்பு எது?



(1) (2) (3)


3. 

இந்த உருவை உருவாக்குவற்குப் பொருத்தமான உருத்துண்டுகள் உள்ள அடைப்பைத் தெரிவு செய்க.



(1) (2) (3)

4. கீழே தரப்பட்ட உரு A இல் இருந்து உரு B ஐ அகற்றும் போது கிடைக்கும் உரு எது?




உரு A உரு B (1) (2) (3)

5. தரப்பட்டுள்ள இலக்க உருவில் கீழ் நோக்கி அல்லது கிடையாக அடுத்தடுத்து இருக்கும் இரு இலக்கங்களின் மொத்தம் 8 இலும் அதிகமாக இருக்குமாறு இலக்கங்கள் இடப்படும் சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை யாது?

8	**4**	**3**	**2**
7	**2**	**4**	**4**
1	**5**	**2**	**6**

(1) 3 (2) 4 (3) 6

6. அடைப்புக்களில் உருக்கள் இடப்பட்டுள்ள ஒழுங்கிற்கு ஏற்ப வெற்றிடத்துக்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க




(1) (2) (3)


[பக். 3 ஐப் பார்க்க

www.ikedu.lk


சுட்டெண்: .....

7. தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவை மேலிருந்து நேராகப் பார்க்கும் போது அது தோற்றும் விதத்தினை தெரிவு செய்க.







(1)



(2)




(3)

8. 

இந்த உருவில் வரையப்பட்டுள்ள கோடுகளின் எண்ணிக்கை யாது?

(1) 9 (2) 10 (3) 11

9. சம அளவுடைய A, B, C, D, E எனும் ஐந்து பாத்திரங்களில் நீர் இடப்பட்டுள்ள விதத்தைப் படம் காட்டுகிறது.



A B C D E

பாத்திரங்களில் இடப்பட்டுள்ள நீரின் அளவுகள் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் **தவறானது** எது?

(1) பாத்திரங்கள் B இலும் D இலும் இடப்பட்டுள்ள நீரின் மொத்த அளவு ஏனைய பாத்திரங்கள் **மூன்றிலும்** இடப்பட்டுள்ள நீரின் மொத்த அளவைப் பார்க்கிலும் அதிகமானது


(2) பாத்திரங்கள் A இலும் C இலும் இடப்பட்டுள்ள நீரின் மொத்த அளவு பாத்திரம் B இல் இடப்பட்டுள்ள நீரின் அளவைப் பார்க்கிலும் குறைவானது.

(3) பாத்திரம் E இல் இடப்பட்டுள்ள நீரின் அளவு பாத்திரம் A இல் **அல்லது** பாத்திரம் C இல் இடப்பட்டுள்ள நீரை விடக் குறைவாக உள்ளது.

10. 

சரியான நேரத்தைப் பார்க்கிலும் ஐந்து நிமிடங்கள் முந்தி நேரத்தை காட்டும் ஒரு கடிகாரம், முகம் பார்க்கும் கண்ணாடியில் தோற்றும் விதம் அருகே தரப்பட்டுள்ளது. இதன்படி, பின்வருவனவற்றில் எது உண்மையான நேரம் ஆகும்.


(1) 9.30 (2) 9.35 (3) 2.20

11. 

பூங்கன்று ஒன்றை நடுவதற்கு செங்கற்களால் செய்யப்பட்ட அமைப்பு ஒன்று அருகே தரப்பட்டுள்ளது. இதன் நடுப்பகுதியில் மண்ணை இட்டு நிரப்புவதற்கான இடைவெளி விடப்பட்டிருப்பினும் அடித்தளம் இடைவெளி இன்றி அமைக்கப்பட்டுள்ளது. இவ்வமைப்புக்குப் பயன்படுத்தப் பட்டுள்ள செங்கற்களின் எண்ணிக்கை யாது?

(1) 36 (2) 40 (3) 48


www.ikedu.lk

12. 


இந்தப் பழைய காரின் பெரிய சக்கரம் 3 முறை சுழலும் போது சிறிய சக்கரம் 5 முறை சுழலும். பெரிய சக்கரத்தின் சுற்றளவு 1.5 மீற்றர் ஆகும். குறித்த ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்குக் கார் பயணித்த போது காரின் சிறிய சக்கரம் 30 முறை சுழன்றது எனின், கார் பயணித்த மொத்தத் தூரம் யாது?

(1) 17 மீற்றர் (2) 27 மீற்றர் (3) 50 மீற்றர்

13. கோலத்திற்கு ஏற்ப ? குறிக்குப் பொருத்தமான உரு யாது?




(1) (2) (3)

14. 

இந்த உருவில் காணத்தக்க முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?

(1) 8 (2) 10 (3) 11


15. 

கட்டங்களுக்குள் வரையப்பட்டுள்ள உருக்களுக்கும் அவ்வுருக்களின் கீழ் உள்ள எண்களுக்கும் ஏற்ப வெற்றுக் கட்டத்தினுள் இடம்பெற வேண்டிய எண் எது?

(1) 15 (2) 24 (3) 18

16. ஒரு பெட்டியில் ஒரு குறித்த எண்ணிக்கையில் நீல நிறப் பேனைகளும் அவ்வெண்ணிக் கையின் இரு மடங்கு கறுப்பு நிறப் பேனைகளும் அந்நீல நிறப் பேனைகளினதும் கறுப்பு நிறப் பேனைகளினதும் மொத்த எண்ணிக்கையின் மூன்று மடங்கு பச்சை நிறப் பேனைகளும் உள்ளன. பெட்டியில் இப்பேனைகள் மாத்திரம் இருப்பின் அதில் உள்ள நீல நிறம் அல்லாத பேனைகளின் எண்ணிக்கை யாது?

(1) 36 (2) 40 (3) 44


17. 

இந்த உருவில் நிறந்தீட்டப்பட்டுள்ள பகுதி முழு உருவின்

(1) $\frac{1}{2}$ இலும் அதிகமாகும்

(2) $\frac{1}{2}$ இலும் குறைவாகும்

(3) $\frac{1}{2}$ ஆகும்.

18. 


இந்த மரச் சதுரமுகியின் நிறை 2 கிராம் ஆகும். இதனைப் போல் இரண்டு மடங்கு நீளம், அகலம், உயரம் உடைய இதே வகை மரச் சதுரமுகியின் நிறை யாது?

(1) 4 கிராம் (2) 8 கிராம் (3) 16 கிராம்


www.ikedu.lk

19. கீழே தரப்பட்டுள்ள உருவில் சம அளவுடைய ஒன்பது சிறிய சதுரங்களும் அவை ஒவ்வொன்றிலும் கோடுகளால் ஆன வடிவங்களும் காணப்படுகின்றன.

நிரை 1
நிரை 2
நிரை 3




ஒவ்வொரு நிரையிலும் உள்ள முதலிரண்டு சதுரங்களிலும் காணப்படும் வடிவங்களை ஒன்றிணைத்து அவை இரண்டிலும் பொதுவாக உள்ள கோடுகள் நீக்கப்பட்ட பின், அந்நிரை யின் மூன்றாம் சதுரத்தில் உள்ள வடிவம் உருவாக்கப்படுகின்றது. அதன் அடிப்படையில் குறித்த ஒரு நிரையின் மூன்றாவது சதுரத்தில் காணப்படும் வடிவம் பிழையானதாகும். கீழே A, B, C, D எனத் தரப்பட்டுள்ள வடிவங்களிலிருந்து அவ்வாறு பிழையான வடிவத்தைக் கொண்டுள்ள சதுரத்தைக் குறிக்கும் எழுத்தையும் அதற்குப் பதிலாக இடுவதற்குப் பொருத்தமான வடிவத்தைக் கொண்டுள்ள சதுரத்தைக் குறிக்கும் எழுத்தையும் முறையே தெரிவு செய்க.



A B C D

(1) D, B (2) B, D (3) A, C

20.




1 2 3

மேலே காட்டப்பட்டுள்ள கோலத்தில் முதலாம் சந்தர்ப்பம் மூன்று ஈர்க்குத் துண்டுகளையும் நான்கு பூக்களையும் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. கோலத்திற்கேற்ப ஐந்தாம் சந்தர்ப்பத்திற்குத் தேவைப்படும் பூக்களினதும் ஈர்க்குத்துண்டுகளினதும் எண்ணிக்கைகள் முறையே எவை?

(1) 13, 15 (2) 16, 15 (3) 13, 12

21. வட்ட வடிவ கடதாசி ஒன்று நான்காக மடிக்கப்பட்டு அதில் சில துளைகள் இடப்பட்டுள்ள விதத்தை முதலில் தரப்பட்டுள்ள உரு காட்டுகிறது. இக்கடதாசித் துண்டை மீண்டும் விரிக்கும் போது காணக்கிடைக்கும் உரு யாது?



(1) (2) (3)

22. காரண காரியத் தொடர்புடன் **அமையாத** சோடி வாக்கியத்தைத் தெரிவு செய்க

(1) மைதானத்திற்குச் சென்றான் - உடற்பயிற்சி செய்தான்
(2) காற்று வீசியது - மரம் அசைந்தது
(3) நன்றாகப் படித்தான் - சித்தியடைந்தான்

www.ikeduk

23. வளர்ந்த பின்னர் நீயுமே
வாலிபத்தை அடைந்ததும்
தளர்ந்திடாமல் உழைத்திடு
தக்க வாழ்வு கிடைக்குமே

இக்கவிதையின்படி, தக்க வாழ்வு கிடைப்பதற்கு ஒருவர்

(1) வளர்ந்து பெரியவராக வேண்டும்
(2) வாலிபத்தை அடைய வேண்டும்
(3) வாலிபத்தை அடைந்ததும் தளர்ச்சியின்றி உழைக்க வேண்டும்



24. சுற்றுலாவொன்றில் கலந்து கொள்ளவிருந்த 42 மாணவர்களில், ஒவ்வொரு 6 பேருக்கும் ஒரு தலைவர் வீதம் மாணவத் தலைவர்களை நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி நியமிக்கப்படவுள்ள தலைவர்கள் எத்தனை பேர்?

(1) 6 (2) 7 (3) 8

25. முதலில் தரப்பட்டுள்ள உருவைப் பூர்த்தி செய்வதற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.




26. A, B ஆகிய கட்டங்களுக்கு மிகப் பொருத்தமான உருக்கள் முறையே எவை?

தச்சன்	மேசன்	விவசாயி
A		
		B


(1) 
(2) 
(3) 

27. உருவில் காட்டப்பட்டுள்ள தராசு சமநிலையில் உள்ளது. அதற்கேற்ப △ இற்குச் சமன்



(1) ○●
(2) ○○
(3) ○○●


28. ஒரே சதுரமுகியின் பல்வேறு பக்கங்கள் இங்கே காட்டப்பட்டுள்ளன.



இலக்கம் 5 இற்கு எதிரே இருக்கும் பக்கத்தில் உள்ள இலக்கம் யாது?

(1) 1 (2) 2 (3) 3

● முகங்கள் மீது பசை பூசி ஒட்டி இணைக்கப்பட்டுள்ள நான்கு சிறிய தாயக்கட்டைகளைக் கொண்ட ஓர் அமைப்பும் அதுபற்றிய விவரங்களும் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றுக்கு ஏற்ப 29, 30 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.



இந்த அமைப்பில் காணப்படும் சிறிய தாயக்கட்டை ஒவ்வொன்றினதும் எதிர்முகங்கள் இரண்டிலும் உள்ள குற்றுக்களின் கூட்டுத்தொகை ஏழு ஆகும்.

பசைபூசி ஒன்றாக இணைக்கப்பட்டிருக்கும் எந்த இரண்டு முகங்களிலும் உள்ள குற்றுக்களின் கூட்டுத்தொகை எட்டு ஆகும்.


29. முகங்கள் B இலும் C இலும் காணப்படும் குற்றுக்களின் எண்ணிக்கைகள் முறையே எவை?

(1) 2, 4 (2) 4, 1 (3) 3, 2


30. முகம் A உடன் புதிய தாயக்கட்டை ஒன்றை ஒட்டி இணைக்க வேண்டி உள்ளது. புதிய தாயக்கட்டையின் எத்தனை குற்றுக்கள் உள்ள முகத்தை, முகம் A உடன் ஒட்டி இணைக்க வேண்டும்?

(1) 3 (2) 4 (3) 5

31. கட்டங்களுக்குள் அம்புக்குறிகள் வரையப்பட்டுள்ள தாள்கள் இரண்டு உரு 1 இலும் உரு 2 இலும் காட்டப்பட்டுள்ளன.



உரு : 1




உரு : 2

உரு 1 இலும் உரு 2 இலும் உள்ள A அடையாளத்தை ஒன்றன் மீது ஒன்று அமையுமாறு ஒரு தாளின் மீது மற்றைய தாள் வைக்கப்பட்டது. கிடைத்த புதிய கட்ட வலையில் ↑ எனும் அம்புக்குறி காணப்படும் தடவைகள் எத்தனை?

(1) மூன்று (2) நான்கு (3) ஐந்து


32. உருக்களில் காட்டப்பட்டுள்ள ஐந்து சந்தர்ப்பங்களையும் ஒழுங்கு முறைப்படி காட்டும் விடை எது?




(1) D, A, E, C, B (2) D, B, A, E, C (3) B, A, E, D, C

www.lkedu.lk

33.  இவ்வுருக்களைத் தொடர்புபடுத்தும் போது கிடைக்கும் விடையைத் தெரிவு செய்க.


(1)


(2)


(3)

34. அப்பா மாமரத்திலிருந்து சில மாங்காய்களைப் பறித்தார். அவற்றை சமமான இரு குவியல்களாக ஆக்கிய போது ஒரு மாங்காயும் சமமான நான்கு குவியல்களாக ஆக்கிய போது மூன்று மாங்காய்களும் எஞ்சியிருந்தன. அப்பா பறித்த மாங்காய்கள் எத்தனை?

(1) 41 (2) 42 (3) 43

35. தொட்டிகளில் வளர்க்கப்படும் மீன்களுக்கான தீன் பைக்கற் ஒன்று 10 மீன்கள் உண்பதற்கு 10 நாட்களுக்குப் போதுமானது. அதன்படி, மூன்று தீன் பைக்கற்றுக்கள் 20 மீன்கள் உண்பதற்கு எத்தனை நாட்களுக்குப் போதுமானது?

(1) 10 (2) 15 (3) 30

36. பராக்கிரமம் என்பது 3624158 என இலக்கங்களினால் காட்டப்பட்டது எனின், கிராமம், பம்பரம் ஆகியனவற்றை முறையே காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) 4658, 38138 (2) 4138, 35315 (3) 4658, 38318

37. ராஜாவிடம் இருந்த பணத்தொகையை விட 25 ரூபாய் கூடுதலாக ஆஷாவிடம் இருந்தது. ஆஷா 15 ரூபாயை ராஜாவுக்கு கொடுத்தால் ராஜாவிடம் உள்ள பணத்தொகை ஆஷாவிடம் உள்ள பணத்தொகையிலும்


(1) ஐந்து ரூபாவினால் கூடியது
(2) பத்து ரூபாவினால் கூடியது
(3) பத்து ரூபாவினால் குறைவானது

38. பின்வரும் சொல்வரிசைகளில் ஏனைய சொற்களுடன் **பொருந்தாத** சொல் இடம்பெறும் சொல்வரிசையைத் தெரிவு செய்க.


(1) சதுரம், செவ்வகம், முக்கோணி, சதுரமுகி
(2) மிளகாய், கத்தரி, தக்காளி, வெண்டி
(3) காலி, கண்டி, அநுராதபுரம், யாழ்ப்பாணம்


39. 'கண்ணன்' எனும் பெயர் இரகசியக் குறியீட்டு முறையில்  என எழுதப்பட்டது எனின்,  என்பதால் காட்டப்படும் பெயர் யாது?


(1) குமணன் (2) வரதன் (3) கமலன்

40. 

இந்தப் பெட்டியை அமைப்பதற்குப் பொருத்தமான வெட்டுருவைத் தெரிவு செய்க.


(1)


(2)


(3)

***

www.ikedu.lk

සියලුම හිමිකම් ඇවිරිණි]
முழுப்பதிப்புரிமையுடையது)
All rights Reserved]

ஆசிரியர்: எம்.ஏ. அபுதாஹிர்

Q First கல்வி நிறுவகம்
முனனோடி வினாத்தாள் 3
5

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான
முனனோடி வினாத்தாள் 2025

வினாத்தாள் II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண்: .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
* இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உபபகுதிகளும் உள்ளன.
* எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை **இவ்வினாத்தாளிலேயே** எழுதுக.
* விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.
* விடையின் கீழே கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும்போது சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழே கோடிடுக.
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம் இலக்கத்தில்	
மொத்தம் எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப் பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளிகள் சரியாகும்	V/I/T/CH

www.ikedu.lk

[பக். 2 ஐப் பார்க்க

1. பின்வரும் உரைப் பகுதியை வாசிக்குக

சரஸ்வதி வித்தியாலயத்தின் இவ்வருடத்திற்கான இல்ல விளையாட்டு விழா முதலாம் தவணையின் ஆரம்பத்தில் வெகு விமரிசையாக நடத்தப்பட்டது. பிரதி அதிபர் தலைமையிலான விழா ஏற்பாட்டுக் குழுவின் இணைச் செயலாளர்கள் என்ற பதவிக்கு உடற்பயிற்சி ஆசிரியர்களான மாதவனும் தேவனும் நியமிக்கப்பட்டனர். அவ்வப்போது அதிபர் ஏற்பாட்டுக் குழுவினருக்குத் தேவையான ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் வழங்கினார். விழாவை சிறப்பாக நடத்தி முடிப்பதற்காக பழைய மாணவர்களும் நலன் விரும்பிகளும் தாமாக முன்வந்து பல உதவிகளைச் செய்தனர்.

கடந்த முறை குறைந்த புள்ளிகளைப் பெற்ற வள்ளுவர் இல்லத்தைச் சேர்ந்த மாணவர்கள் கடுமையான பயிற்சிகளில் ஈடுபட்டுப் போட்டிகளில் பங்குபற்றினர். பாரதி இல்லத்தினர் இவர்களுக்குக் கடும் சவாலாக விளங்கிய போதும் வள்ளுவர் இல்லத்தினரே இறுதியில் முதலிடம் பெற்றனர். இல்லங்களுக்கிடையே நிலவிய கடும் போட்டியின் காரணமாக சரஸ்வதி வித்தியாலயத்தின் இவ்வருட இல்ல விளையாட்டு விழா பரபரப்பு நிறைந்ததாகவும் உற்சாகம் மிகுந்ததாகவும் இனிதே நடந்து முடிந்தது.

● உரைப் பகுதியைக் கருத்திற் கொண்டு விடை எழுதுக

(i) சரஸ்வதி வித்தியாலயத்தின் இவ்வருடத்திற்கான இல்ல விளையாட்டு விழா எப்போது நடத்தப்பட்டது?

.....

(ii) விழா ஏற்பாட்டுக் குழுவின் தலைவர் யார்?

.....

(iii) உடற்பயிற்சி ஆசிரியர்களான மாதவனும் தேவனும் விழா ஏற்பாட்டுக் குழுவின் எப்பதவிக்கு நியமிக்கப்பட்டனர்?

.....

(iv) விழா ஏற்பாட்டுக் குழுவினருக்கு அதிபர் அவ்வப்போது எவற்றை வழங்கினார்?

.....

(v) விழாவைச் சிறப்பாக நடத்தி முடிக்க, தாமாக முன்வந்து உதவியோர் யாவர்?

.....

(vi) கடுமையான பயிற்சிகளில் ஈடுபட்டு, போட்டிகளில் பங்குபற்றிய மாணவர்கள் எந்த இல்லத்தைச் சேர்ந்தவர்கள்?

.....

(vii) எதன் காரணமாக, சரஸ்வதி வித்தியாலய இல்ல விளையாட்டு விழா பரபரப்பு நிறைந்ததாகவும் உற்சாகம் மிகுந்ததாகவும் நடந்து முடிந்தது?

.....

2. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் எதிரே உள்ள அடைப்புக் குறிக்குள் அடையாளம் இடுக.

(i) வெற்றி பெற்ற ஒவ்வொரு வீரருக்கும் பரிசு வழங்கப்பட்டது. (.....)

(ii) ஆசிரியர், பயிற்சிக் கொப்பிகளைத் திருத்துகின்றார்கள் (.....)

(iii) டெங்கு நுளம்புகளை ஒழிக்கும் வேலைத்திட்டத்தை அரசு நடைமுறைப்படுத்துகின்றது (.....)

www.ikedu.lk

சுட்டெண் : .....

(iv) அழைப்பு விடுக்கப்பட்டதும் அவன் மேடையில் ஏறிப் பேசத் தொடங்கினாள் (.....)

(v) அதிபரும் ஆசிரியர்களும் பிரதம அதிதியை வரவேற்றார் (.....)

3. பன்மை இறந்தகால வினைச் சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(1) நடக்கின்றன (2) பறந்தது (3) விழுந்தன

4. கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

(i) மருங்கிலும் / மரங்கள் / இரு / நடப்பட்டன / வீதியின் / நிழல்

.....

(ii) கற்றுக் / வாழலாம் / கொண்டால் / கோபத்தைக் / சிறப்பாக / கட்டுப்படுத்தக்

.....

5. பின்வரும் வாக்கியத்தில் உரிய இடங்களில் பொருத்தமான நிறுத்தக் குறியீடுகளை இடுக.

கல்விக்கு அழகு கசடற மொழிதல் என்றனர் எம் முன்னோர்கள்

6. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக் கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக் குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடு இடுக.

(i) மாணவர்களும் ஆசிரியர்களும் (கழப்பயணம் / களப்பயணம்) ஒன்றை மேற்கொண்டனர்

(ii) அலங்கார மீன்களைப் பார்த்து மகிழ்வதால் மன (அளுத்தம் / அழுத்தம்) குறைகிறது.

7. பின்வரும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான பழமொழியைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

மனிதனுக்கு மனநிறைவைப் போன்ற சுகமளிக்கும் செல்வம் வேறொன்றுமில்லை

.....

8. பின்வரும் வாக்கியங்களை நிகழ்கால வாக்கியங்களாக மாற்றி எழுதுக

(i) குமார் நண்பர்களுடன் சேர்ந்து விளையாடினான்

.....

(ii) மாணவர்கள் பரீட்சைக்காகப் படித்தனர்

.....


9. பின்வரும் தொடர்கள் குறிக்கும் தனிச்சொல்லை எழுதுக

(i) தெருக்கள் சந்திக்கும் இடம் :.....


(ii) ஒரே பாடசாலையில் ஒன்றாகப் படிப்பவன் :.....

10. பின்வரும் ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான சொல்லைத் தரப்பட்ட கட்டத்தினுள் **ஆங்கில** எழுத்துக்களில் எழுதுக

(i)



(ii)



www.ikedu.lk

11. தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி, கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.

(i) am / my / helping / I / mother

.....

(ii) you / like? / what / do

.....

12. ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லுக்கும் உரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

(i) Kitchen :..... (ii) Sand :.....

13. 'சந்துதா (සිඳුදා)' என்ற சிங்களச் சொல்லுக்குரிய **தமிழ்ச்** சொல்லை எழுதுக.

.....

14. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தைத் **தமிழில்** எழுதுக.

உள்ளே வரலாமா? : .....

15. பின்வரும் எண்களுள் 3 எனும் இலக்கத்தினால் வகை குறிக்கப்படும் பெறுமானம் 30 ஆகவும் 5 எனும் இலக்கத்தினால் வகை குறிக்கப்படும் பெறுமானம் 5000 ஆகவும் உள்ள எண் எது?

16534, 15328, 15437 :.....

16.

6	0
3	8

அடைப்பினுள் உள்ள எல்லா இலக்கங்களையும் பயன்படுத்தி எழுதக்கூடிய மிகச்சிறிய எண்ணை எழுத்தில் எழுதுக.

:.....


17. பின்வரும் எண்களை ஏறுவரிசைப்படுத்தி எழுதுக

3487, 3768, 5815, 3567 :.....

18. தரப்பட்டுள்ள ஒவ்வோர் எண்கோலத்திலும் உள்ள இடைவெளிக்குப் பொருத்தமான எண்ணை எழுதுக

(i) 77, 81, 85, ...

(ii) 1, 7, ..., 19, 25

19. 

(i) இவ்வுருவில் நிழற்றப்பட்ட பகுதியை முழு உருவின் பின்னமாக எழுதுக

: .....

(ii) இவ்வுருவில் **நிழற்றப்படாத** பகுதியை ஒரு தசம எண்ணாக எழுதுக

: .....

20. ஓர் எண்ணை நான்கினால் பெருக்கும் போது விடை 412 ஆகும். அவ்வெண் யாது?

: .....

21. ஒரு கொத்தில் 6 பலூன்கள் வீதம் 115 பலூன் கொத்துக்களைப் பயன்படுத்தி மண்டபம் ஒன்று அலங்கரிக்கப்பட்டுள்ளது. தொங்கவிடப்பட்டுள்ள பலூன்களின் மொத்த எண்ணிக்கை யாது?

: .....

22. பாடசாலை விளையாட்டுப் போட்டியில் பரிசளிப்பு நிகழ்ச்சி பி.ப. 4.25 இற்கு ஆரம்பித்து பி.ப. 5.05 இற்கு முடிவடைந்தது. பரிசளிப்பு நிகழ்ச்சி எவ்வளவு நேரம் இடம்பெற்றது?

: .....

www.lkedu.lk

23. போத்தல் ஒன்று கொள்ளும் நீரின் அளவு 750 *ml* ஆகும். இப்போத்தலினால் மூன்று தடவைகள் நீரை நிரப்பி சிறிய பாத்திரம் ஒன்றில் இடப்பட்டது. பாத்திரத்தில் இடப்பட்ட நீரின் அளவு யாது?

.....*l*.....*ml*

24. கனவுரு ஒன்றுக்கு உள்ள உச்சிகளினதும் விளிம்புகளினதும் எண்ணிக்கைகள் யாவை?

உச்சிகள் :..... விளிம்புகள் :.....

25. தூரம் பாய்தல் போட்டி ஒன்றில் அமுதா 2m 35cm தூரமும் அருணா 1m 65 cm தூரமும் பாய்ந்தனர். அருணாவிலும் அமுதா கூடுதலாகப் பாய்ந்துள்ள தூரம் யாது?

: .....*cm*

26. கண்ணன் 1kg 850g நிறையுள்ள ஒரு தர்ப்பூசணியையும் 1kg 700g நிறையுள்ள இன்னொரு தர்ப்பூசணியையும் வாங்கினார். கண்ணன் வாங்கிய தர்ப்பூசணிகளின் மொத்த நிறை யாது?

.....kg .....g

27. விளையாட்டுப் போட்டி ஒன்றில் மூன்று இல்லங்கள் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

மல்லிகை இல்லம் - 578	முல்லை இல்லம் - 616	ரோஜா இல்லம் - 586

மல்லிகை, முல்லை ஆகிய இல்லங்கள் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் மொத்த எண்ணிக்கை ரோஜா இல்லம் பெற்றுக் கொண்ட புள்ளிகளை விட எவ்வளவினால் கூடியது?

: .....

28. 36 தோடம் பழங்களின் நான்கில் இரண்டு பங்குகளில் எத்தனை தோடம்பழங்கள் உண்டு?

: .....

29. பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.

பொருள்	வாங்கிய அளவு	1kg இன் விலை		பெறுமதி	
		ரூபாய்	சதம்	ரூபாய்	சதம்
பப்பாசிப்பழம்	750g	(I)	.....	225	00
வாழைப்பழம்	1kg 250g	120	00	(ii)	.....
			மொத்தப் பணம்	375	00

● 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

30. குறித்த வேளையில் உணவு உண்ணாத நபர் ஒருவருக்கு ஏற்படக்கூடிய நோய்

(1) உயர் குருதியமுக்கம் (2) நீரிழிவு (3) இரைப்பையழற்சி

31. இலங்கையின் தேசிய மரத்தையும் தேசிய மலரையும் முறையே குறிப்பிடும் விடை எது?

(1) நாகமரம், தாமரை (2) நாகமரம், நீலோற்பலம் (3) கொன்றை மரம், தாமரை

32. புளியமர இலைகளை ஒத்த வடிவம் உள்ள இலைகளை உடைய தாவரம்

(1) அகத்தி (2) ஆமணக்கு (3) பலா

www.lkedu.lk

33. "புறப்படுவோமே மச்சான் புறப்படுவோமே
கட்டுவலை எடுத்துக்கிட்டுப் புறப்படுவோமே"
எனும் பாடல்

(1) கும்மிப் பாடல் (2) மீனவர் பாடல் (3) அரிவி வெட்டுப் பாடல்

34. பாத்திரமொன்றில் உணவு அல்லது பானத்தை இடுவதற்கு முன் செய்ய வேண்டியது யாது?

(1) பாத்திரத்தை நன்றாகக் கழுவ வேண்டும்
(2) பாத்திரத்தை நன்றாகத் துடைக்க வேண்டும்
(3) பாத்திரத்தை நன்றாகக் கழுவி ஈரலிப்பு நீங்கக் கூடியவாறு நன்கு துடைக்க வேண்டும்.

35. சதுப்பு நிலங்களில் கட்டுமான வேலைகளைச் செய்வதால் ஏற்படத்தக்க அனர்த்தம்

(1) நிலநடுக்கம் (2) வெள்ளப்பெருக்கு (3) சுனாமி

36. காற்றின் மூலம் பரம்பலடையும் வித்துக்களிலும் பழங்களிலும் காணமுடியாத ஓர் அம்சம் எது?

(1) பாரமற்றதாகக் காணப்படுதல்
(2) பறப்பதற்கு உதவும் சிறகுகள் போன்ற கட்டமைப்பு காணப்படுதல்
(3) ஆடைகளில், அல்லது விலங்குகளில் ஒட்டும் தன்மை காணப்படுதல்

37. நுகத்தடி பயன்படுத்தப்படுவது

(1) வயல் வேலையில் (2) தச்சு வேலையில் (3) மேசன் வேலையில்

38. ஒருவர் மயக்கமடைந்ததும் உடனடியாகச் செய்ய வேண்டியது

(1) குளிர் நீர் பருகக் கொடுத்தல்
(2) நன்கு காற்றோட்டம் கிடைக்கச் செய்தல்
(3) உடலை நன்கு போர்த்துதல்

39. 

காட்டப்பட்டுள்ள உடுக்கோலம்

(1) பெருங்கரடி
(2) தேள்
(3) வேட்டைக்காரன் (ஓராயன்)

40. வளவை நதி கடலில் சேரும் இடம்

(1) அம்பாந்தோட்டை (2) அம்பலாந்தோட்டை (3) திருகோணமலை

41. தன்னிறைவும் செழிப்பும் என்பதைக் குறிக்க, இலங்கைத் தேசிய இலச்சினையில் காணப்படுவது

(1) சூரியன் சந்திரன் (2) நெற்கதிர் (3) நிறைகுடம்

42. முற்காலத்தில் சேனைப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட எமது முன்னோர், விதைப்புச் செய்து வெளியேறும் தினத்தில் செய்தது

(1) வார்கட்டல்
(2) தீபக் குடிசை அமைத்தல்
(3) காவற்பாடல்கள் பாடுதல்

43. ஊதா நிறத்தைப் பெறக் கலக்க வேண்டிய இரண்டு நிறங்களும் எவை?

(1) நீலம், சிவப்பு (2) மஞ்சள், சிவப்பு (3) நீலம், மஞ்சள்

[பக். 7 ஐப் பார்க்க


www.lkedu.lk

44. மண்சரிவு அபாயம் உள்ள பிரதேசம் ஒன்றில் வாழ்பவர் தொடர்ச்சியான அடைமழை இடம்பெறும் போது அப்பிரதேசத்தில் இருந்து அப்பாற் செல்வதற்குப் பொருத்தமான இடமாக இருக்கக் கூடியது

(1) மரங்கள் அற்ற மலைச் சரிவான பிரதேசம்
(2) விலங்குகள், பறவைகள் என்பன வழமைக்கு மாறான நடத்தைகளைக் காட்டும் பிரதேசம்
(3) சரிவு குறைவான சமதளமான பிரதேசம்

45. ஒரு நாட்டுக்கே உரித்தான தாவரங்கள் **மாத்திரம்** அடங்கிய விடை

(1) எண்ணை, ரம்புட்டான் (2) கொடபறை, கெக்கட்டியா (3) மா, ஆனைக்கொய்யா

46. 

மின்குமிழை ஒளிரச் செய்வதற்கு கம்பித்துண்டு A வைக்கப்பட வேண்டிய இடத்தைக் குறிக்கும் எழுத்து எது?

(1) B (2) C (3) D

47. ஊனுண்ணும் விலங்குகள் காட்டில் வாழும் தாவரம் உண்ணும் விலங்குகளை உணவாகக் கொள்வதால் நடைபெறுவது யாது?

(1) தாவரம் உண்ணும் விலங்குகள் அனைத்தும் அழிந்துவிடும்
(2) காட்டில் பிராணிகளின் தொகை கட்டுப்படுத்தப்பட்டுச் சூழல் சமநிலை பேணப்படும்
(3) தாவரம் உண்ணும் விலங்குகள் கொல்லப்படுவதால் காட்டு மரங்கள் அளவுக்கதிகமாகப் பெருகும்

48. சிங்கள இன மக்களைக் குறிப்பதற்கு மஞ்சள்நிற வாளேந்திய சிங்கஉரு பயன் படுத்தப்பட்டிருப்பது இலங்கையின்

(1) தேசிய இலச்சினையில்
(2) தேசியக் கொடியில்
(3) தேசிய இலச்சினையிலும், தேசியக் கொடியிலும்

49. கிண்ணை முதலான கண்டல் தாவரங்களில் வளிமண்டல வளியை உள்ளெடுக்கும் கட்டமைப்புகளுடன் விருத்தியடைந்து காணப்படும் வேர் எது?

(1) மிண்டிவேர் (2) தாங்கும்வேர் (3) மூச்சுவேர்

50. இந்த வீதிக்குறியீடு குறிப்பது



(1) இரட்டை வண்டிப் பாதை முன்னால் முடிவடைகிறது என்பதை
(2) ஒடுக்கமான பாலம் முன்னால் என்பதை
(3) வீதி முன்னால் ஒடுங்குகிறது என்பதை

51. காலிக்கோட்டை முதன் முதலில் கட்டப்பட்டது

(1) போர்த்துக்கேயரால் (2) ஒல்லாந்தரால் (3) ஆங்கிலேயரால்

52. வெளவால், கபரகொய்யன் ஆகிய பிராணிகளால் மனிதருக்குக் கிடைக்கும் நன்மைகளை ஒழுங்கு முறைப்படி காட்டும் விடை

(1) சூழல் மாற்றத்தை அறிவித்தல், சுற்றாடலை அழகுபடுத்தல்
(2) சுற்றாடலை அழகுபடுத்தல், இரவில் நடமாடுதல்
(3) வித்துக்களைப் பரவச் செய்தல், தீங்கான பிராணிகளை அழித்தல்

www.ikedu.lk

53. நுளம்புகள் எமது அருகில் வருவதைத் தவிர்ப்பதற்காக உடம்பில் பூசுவதற்குப் பொருத்தமான எண்ணெய்

(1) தேங்காய் எண்ணெய்
(2) காவட்டம்புல் எண்ணெய்
(3) நல்லெண்ணெய்

54. விறகு, காற்று ஆகியன பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் முறையே எவை?

(1) போரணைகளில் பாணை வெதுப்புதல், ஈரத்துணிகளை உலர்த்துதல்
(2) நெல் தூற்றுதல், ஞாயிற்றுக் கலங்கள் மூலம் மின்சக்தியைப் பெறுதல்
(3) ஈரத்துணிகளை உலர்த்துதல், நெல் தூற்றுதல்

55. அரசு பெருந்தொகைப் பணத்தைச் செலவு செய்து நாட்டு மக்களுக்கு இலவசமாக வழங்கும் சேவைகள்

(1) மின்சாரம். போக்குவரத்து (2) கல்வி, சுகாதாரம் (3) தபால், மின்சாரம்

56. ஊவா மாகாணத்தில் அமைந்திருப்பது

(1) சிங்கராஜ வனம்
(2) மத்தள சர்வதேச விமான நிலையம்
(3) கதிர்காமப் புனித நகர்

57. சூரிய ஒளியில் உள்ள மூன்று நிறங்கள்

(1) சிவப்பு, கறுப்பு, நீலம் (2) கபிலம், நீலம், மஞ்சள் (3) நீலம், மஞ்சள், பச்சை

58. தட்டையான வித்துக்கு உதாரணமாக அமைவது

(1) நெல்லி (2) மரமுந்திரிகை (3) பூசணி

59. மனிதன் தொடர்பாடலுக்காக ஆதிகாலத்தில் பயன்படுத்திய முறை **அல்லாதது**

(1) கொடியசைத்தல்
(2) மின்னஞ்சலைப் பயன்படுத்தல்
(3) முரசறைதல்

60. 'சூரியன் உதித்து எழும் காலை நேரக் கிழக்கு வானின் அழகு' என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் **ஐந்து** சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பு, எழுத்துக் கூட்டல் என்பவையும் சரியாக இருத்தல் வேண்டும்)

1. .....
.....
.....

2. .....
.....
.....

3. .....
.....
.....

***

www.lkedu.lk

Q First
174, Al-Munawwara Road,
Akkaraipattu - 04.

077 2933684,
077 0763923

25.04.2025

மதிப்பிற்குரிய அதிபர், ஆசிரியர்களுக்கு,

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2025
முன்னோடி வினாத்தாள் - 1, 2, 3

எமது முன்னோடி வினாத்தாள்களில் 1, 2, 3 ஆகியன இத்துடன் அனுப்பப்பட்டுள்ளன. இவற்றைப் பின்வரும் தினங்களில் நடாத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்யுமாறு தங்களுக்கு ஆலோசனை வழங்கப்படுகிறது. நன்றி!

முன்னோடி வினாத்தாள் 1 - 09.05.2025
முன்னோடி வினாத்தாள் 2 - 14.05.2025
முன்னோடி வினாத்தாள் 3 - 20.05.2025

பணிப்பாளர்
Q First

முன்னோடி வினாத்தாள் - 2025 தரம் - 5
விடைகள்

முன்னோடி வினாத்தாள் 1 - I

1. (2)	2. (2)	3. (3)	4. (3)	5. (2)	6. (1)	7. (2)	8. (2)
9. (1)	10. (3)	11. (3)	12. (2)	13. (2)	14. (3)	15. (3)	16. (1)
17. (1)	18. (3)	19. (2)	20. (3)	21. (2)	22. (2)	23. (2)	24. (2)
25. (1)	26. (2)	27. (3)	28. (2)	29. (1)	30. (1)	31. (2)	32. (2)
33. (2)	34. (1)	35. (2)	36. (1)	37. (3)	38. (3)	39. (2)	40. (1)

முன்னோடி வினாத்தாள் 2 - I

1. (3)	2. (1)	3. (2)	4. (2)	5. (1)	6. (2)	7. (2)	8. (3)
9. (3)	10. (2)	11. (2)	12. (3)	13. (3)	14. (1)	15. (1)	16. (2)
17. (1)	18. (2)	19. (3)	20. (2)	21. (2)	22. (3)	23. (2)	24. (2)
25. (1)	26. (2)	27. (3)	28. (3)	29. (3)	30. (1)	31. (3)	32. (3)
33. (1)	34. (3)	35. (1)	36. (3)	37. (1)	38. (3)	39. (3)	40. (1)

முன்னோடி வினாத்தாள் 3 - I

1. (2)	2. (2)	3. (3)	4. (2)	5. (2)	6. (3)	7. (2)	8. (1)
9. (3)	10. (1)	11. (2)	12. (2)	13. (3)	14. (3)	15. (1)	16. (3)
17. (1)	18. (3)	19. (3)	20. (2)	21. (2)	22. (1)	23. (3)	24. (1)
25. (2)	26. (3)	27. (2)	28. (3)	29. (1)	30. (3)	31. (2)	32. (2)
33. (1)	34. (3)	35. (2)	36. (3)	37. (1)	38. (1)	39. (2)	40. (2)

www.ikedu.lk

முன்னோடி வினாத்தாள் 1 - II

1. (i) காலையில் நேரத்தோடு (ii) வயலுக்கு (iii) அப்பா சென்ற பின்னர் / அப்பா வயலுக்குச் சென்ற பின்னர்
(iv) முற்றத்தைப் பெருக்குதல், தோட்டத்திற்கு நீரூற்றுதல், காலை உணவைத் தயார் செய்தல்
(இவற்றில் ஏதேனும் இரண்டை எழுதி இருப்பின் புள்ளி வழங்குக.)
(v) மேகலா (vi) மகிழ்ச்சி (6புள்ளி)

2. (i) அலங்கரிக்கப்பட்டது (ii) இறங்கினர் (iii) அழைத்தார்
(iv) திறமையானவர்கள் (v) கட்டுகின்றன (5புள்ளி)

3. (i) மலர்ந்து, பரப்பின (ii) கிராமிய, வெளிப்படுத்துவன (2புள்ளி)

4. (i) பறவைகள் கூடுகளை நோக்கிப் பறந்தன (ii) அரங்கம் சனத்திரளினால் நிரம்பி வழிந்தது (2புள்ளி)

5. (i) நுளம்புகள் டெங்கு முதலான பல கொடிய நோய்களைப் பரப்புகின்றன
(ii) செய்ந்நன்றி மறவாது வாழ்வதே சிறந்த பண்பு
(2புள்ளி)

6. (i) அடுத்த விடுமுறைக்குக் கட்டாயம் அங்கே வருவோம்
(ii) முற்றத்தில் நிற்கும் மாமரம் பூத்திருக்கிறது / பூத்திருக்கின்றது (2புள்ளி)

7. "ஆழமறியாமல் காலை விடாதே" என்பது பழமொழி ஆகும். (1புள்ளி)

8. (3) மாணவர்கள் (1புள்ளி)

9. (i) தாள் (ii) களிறு (2புள்ளி)

10. (i) BROOM / Broom / broom (ii) BRINJAL / Brinjal / brinjal (2புள்ளி)

11. (i) I have a red beak (ii) It is on the table (2புள்ளி)

12. (i) தேனீ (ii) வேலி (2புள்ளி)

13. வைத்தியசாலை (1புள்ளி)

14. ஒப கவுத? (1புள்ளி)

15. 70000, எழுபதாயிரம் (2புள்ளி)

16. 600 / அறுநூறு (2புள்ளி)

17. 10347 (2புள்ளி)

18. 34, 25 (2புள்ளி)

19. 1811 (2புள்ளி)

20. 6 / ஆறு (2புள்ளி)

21. (i) 2 / இரண்டு (ii) 2 / இரண்டு (2புள்ளி)

22. (i) 392 (ii) 98 (4புள்ளி)

23. 750m / 750 மீற்றர் (2புள்ளி)

24. 17 (2புள்ளி)

25. 4 40 (2புள்ளி)

26. 0.7 (2புள்ளி)

27. 1, 80 (2புள்ளி)

28. 4.00 (2புள்ளி)

29. (i) ஊதா, சிவப்பு (ii) 34 (2புள்ளி)

30. (2) 31. (1) 32. (3) 33. (1) 34. (3) 35. (1) 36. (3) 37. (1) 38. (2) 39. (2)
40. (3) 41. (2) 42. (2) 43. (3) 44. (1) 45. (1) 46. (2) 47. (2) 48. (1) 49. (3)
50. (1) 51. (3) 52. (1) 53. (3) 54. (1) 55. (2) 56. (3) 57. (2) 58. (3) 59. (1) (30புள்ளி)

60. தலைப்புக்குப் பொருத்தமான வாக்கியங்களுக்கு புள்ளி வழங்குக. வாக்கியங்கள் எழுத்து வழக்கில் அமைந்தவையாக இருத்தல் வேண்டும். (வாக்கியம் ஒன்றில் ஓர் எழுத்துப் பிழை மட்டும் இருப்பின் அவ்வாக்கியத்திற்கு 1 புள்ளி வழங்குக. ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துப் பிழைகள் இருப்பின் அவ்வாக்கியத்திற்குப் புள்ளி வழங்கவேண்டாம்)
(6புள்ளி)
முழுவிடைத்தாளையும் கருத்திற்கொண்டு தெளிவான எழுத்து, நேர்த்தி என்பவற்றிற்கு போணஸாக (1புள்ளி)

www.lkedu.lk

முன்னோடி வினாத்தாள் 2 - II

1. (i) காரிருளில் செல்பவர்களுக்கு (ii) புத்தகங்கள் வாசிப்பதனால்
(iii) பேரும் புகழும் பெற்று வாழ்ந்த மாமேதைகள் அனைவரும் / மாமேதைகள் அனைவரும் / மாமேதைகள்
(iv) எண்ணற்ற (v) வாசிப்பதற்கென்று இன்று யாரும் இல்லை என்ற நிலை ஏற்பட்டுள்ளமை
(vi) பேரும் புகழும் (6புள்ளி)

2. (i) சென்றோம் (ii) அழைத்தார் (iii) வருகின்றது (iv) ஊட்டியது (v) பரவுகின்றது (5புள்ளி)

3. (i) காய்ச்சல் (ii) பேச்சாளர் (2புள்ளி)

4. (i) புராதனம் (ii) நகல் (2புள்ளி)

5. அதிபர் (1புள்ளி)

6. (i) குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும் (ii) தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும் (2புள்ளி)

7. (i) செல்வேன் (ii) செய்வார்கள் / செய்வர் (2புள்ளி)

8. (i) ஏமாற்றுதல் (ii) பதற்றக்காரன் (2புள்ளி)

9. "நீங்கள் எல்லோரும் இங்கே வாருங்கள்" என்று ஆசிரியர் அழைத்தார். (1புள்ளி)

10. (i) Cabbage / CABBAGE / cabbage (ii) Spider / SPIDER / spider (2புள்ளி)

11. (i) They are going to the playground (ii) I have three sisters (2புள்ளி)

12. (i) காற்று (ii) கதவு (2புள்ளி)

13. அடிமட்டம் (1புள்ளி)

14. மெஹே நவதின்ன / மெதன இன்ன (1புள்ளி)

15. மூவாயிரத்து இருநூற்று நாற்பது (2புள்ளி)

16. 162, 167 (2புள்ளி)

17. 21 / இருபத்தொன்று (2புள்ளி)

18. பி.ப. 12.50 (2புள்ளி)

19. 206 (2புள்ளி)

20. 750 (2புள்ளி)

21. 15 600 (2புள்ளி)

22. 1 / ஒன்று (1புள்ளி)

23. 7 / ஏழு (2புள்ளி)

24. 0.3 (1புள்ளி)

25. 1236 (2புள்ளி)

26. 84110, 61024, 60421 (2புள்ளி)

27. 843 (2புள்ளி)

28. (i) 530.00 (ii) 30.00 (4புள்ளி)

29. (i) வரைபில் சரியாகக் குறித்து நிழற்றியிருப்பின் புள்ளி வழங்குக
(ii) 3 / மூன்று (4புள்ளி)

30. (3) 31. (1) 32. (2) 33. (2) 34. (2) 35. (1) 36. (1) 37. (3) 38. (2) 39. (3)
40. (2) 41. (3) 42. (3) 43. (2) 44. (3) 45. (1) 46. (3) 47. (1) 48. (3) 49. (3)
50. (3) 51. (2) 52. (3) 53. (3) 54. (3) 55. (3) 56. (1) 57. (3) 58. (2) 59. (1) (30புள்ளி)

60. பொருத்தமான வாக்கியங்களுக்குப் புள்ளி வழங்குக
வாக்கியங்கள் எதிர்காலத்தில் அமைந்திருந்தல் அவசியமாகும்
வாக்கியம் ஒன்றில் 1 எழுத்துப் பிழை இருப்பின் அவ்வாக்கியத்துக்கு 1 புள்ளி மாத்திரம் வழங்குக. ஒரு வாக்கியத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துப் பிழைகள் இருப்பின் அவ்வாக்கியத்துக்குப் புள்ளி வழங்க வேண்டாம். (6புள்ளி)

முழுவிடைத்தாளையும் கருத்திற்கொண்டு தெளிவான எழுத்து, நேர்த்தி என்பவற்றிற்கு போனஸாக (1புள்ளி)

www.lkedu.lk

முன்னோடி வினாத்தாள் 3 - II

1. (i) முதலாம் தவணையின் ஆரம்பத்தில் (ii) பிரதி அதிபர் (iii) இணைச் செயலாளர்கள் (என்ற பதவிக்கு)
(iv) தேவையான ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் / ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும்
(v) பழைய மாணவர்களும் நலன் விரும்பிகளும் (vi) வள்ளுவர் இல்லத்தை
(vii) இல்லங்களுக்கிடையே நிலவிய கடும் போட்டியின் காரணமாக (7புள்ளி)

2. (i) ✓ (ii) × (iii) ✓ (iv) × (v) × (5புள்ளி)

3. (3) விழுந்தன (1புள்ளி)

4. (i) வீதியின் இரு மருங்கிலும் நிழல் மரங்கள் நடப்பட்டன
(ii) கோபத்தைக் கட்டுப்படுத்தக் கற்றுக் கொண்டால் சிறப்பாக வாழலாம் (2புள்ளி)

5. "கல்விக்கு அழகு கசடற மொழிதல்" என்றனர் எம் முன்னோர்கள் (1புள்ளி)

6. (i) களப்பயணம் (ii) அழுத்தம் (2புள்ளி)

7. போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து (1புள்ளி)

8. (i) குமார் நண்பர்களுடன் சேர்ந்து விளையாடுகின்றான் / விளையாடுகிறான்
(ii) மாணவர்கள் பரீட்சைக்காகப் படிக்கின்றனர் (2புள்ளி)

9. i) சந்தி / சதுக்கம் (ii) சகபாடி (2புள்ளி)

10. (i) Guava / GUAVA / guava (ii) Rabbit / RABBIT / rabbit (2புள்ளி)

11. (i) I am helping my mother (ii) What do you like? (2புள்ளி)

12. (i) சமையலறை (ii) மணல் (2புள்ளி)

13. திங்கள் (1புள்ளி)

14. அத்துலட என்னத? (1புள்ளி)

15. 15437 (2புள்ளி)

16. மூவாயிரத்து அறுபத்தெட்டு (2புள்ளி)

17. 3487, 3567, 3768, 5815 (2புள்ளி)

18. (i) 89 (ii) 13 (2புள்ளி)

19. (i) $\frac{3}{10}$ (ii) 0.7 (2புள்ளி)

20. 103 (2புள்ளி)

21. 690 (2புள்ளி)

22. 40 நிமிடம் (2புள்ளி)

23. *2l 250ml* (2புள்ளி)

24. 8, 12 (2புள்ளி)

25. 70 (2புள்ளி)

26. 3 550 (2புள்ளி)

27. 608 (2புள்ளி)

28. 18 (2புள்ளி)

29. (i) 300.00 (ii) 150.00 (4புள்ளி)

30. (3) 31. (2) 32. (1) 33. (2) 34. (3) 35. (2) 36. (3) 37. (1) 38. (2) 39. (3)
40. (2) 41. (2) 42. (2) 43. (1) 44. (3) 45. (2) 46. (2) 47. (2) 48. (2) 49. (3)
50. (3) 51. (1) 52. (3) 53. (2) 54. (1) 55. (2) 56. (3) 57. (3) 58. (3) 59. (2) (30புள்ளி)

60. பொருத்தமான வாக்கியங்களுக்குப் புள்ளி வழங்குக
சூரிய உதயத்தின் போது கிழக்கு வானம் காணப்படும் அழகைப் பற்றி எழுதப்பட்டுள்ள வாக்கியங்களுக்குப் புள்ளி வழங்குக.
வாக்கியம் ஒன்றில் 1 எழுத்துப் பிழை இருப்பின் அவ்வாக்கியத்துக்கு 1 புள்ளி மாத்திரம் வழங்குக. ஒரு வாக்கியத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துப் பிழைகள் இருப்பின் அவ்வாக்கியத்துக்குப் புள்ளி வழங்க வேண்டாம். (6புள்ளி)

முழுவிடைத்தாளையும் கருத்திற்கொண்டு தெளிவான எழுத்து, நேர்த்தி என்பவற்றிற்கு போணஸாக (1புள்ளி)

www.1kedu.lk